சார்பு நீதிமன்றம், நாகப்பட்டினம்

**O.S. No. 7 /2015**

2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 04 ம் நாள் திங்கட்கிழமை 1 ம் பிரதிவாதி தரப்பு சாட்சியமாகிய ஞானசேகரன் DW1 வாக்குமுலம் 1869 ஆம் ஆண்டின் 44 வது சட்ட விதிகளின் படி / ஏற்பாட்டின்படி திரு.கே.சீனிவாசன்,எம்.ஏ.,எல்.எல்.எம்., சார்பு நீதிபதி நாகப்பட்டினம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | ஞானசேகரன் | கிராமம் |
| வயது | | தாலுக்கா |
| தகப்பனார் பெயர் | | ஜாதி |
| கணவர் பெயர் | | சமயம் |
| தொழில் | | |

04.09.2023

**முதல் விசாரணை**

நான் எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். இதில் உள்ளது எனது கையெழுத்துத்தான். இதனை எனது சாட்சியத்தின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ள கேட்டுக் கொள்கிறேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுகிறேன். 01.10.2000 ம் தேதியில் 1 ம் பிரதிவாதியின் தாயார் சுப்புலெட்சுமி அம்மாள் இறந்ததற்கான இறப்பு சான்று பதிவு நகல் **பி.வா.சா.ஆ.1** ஆகும். 15.09.1958 தேதியிட்ட சுப்புலெட்சுமி அம்மாள் கிரையம் பெற்ற கிரைய சாசனம் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.2** ஆகும். 06.05.2002 தேதியிட்ட கோவிந்தராஜன் எழுதிவைத்த உயில் ஆவணம் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.3** ஆகும். (ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது). 05.04.2011 தேதியிட்ட கோவிந்தராஜன் அவர்களின் இறப்பு சான்றிதழ் பதிவு நகல் **பி.வா.சா.ஆ.4** ஆகும். 25.11.2011 தேதிக்கான தாவா சொத்திற்கான பட்டா மாறுதல் உத்தரவு அசல் **பி.வா.சா.ஆ.5** ஆகும். 20.07.2018 தேதியிட்ட தாவா சொத்திற்கு நாகப்பட்டினம் நகராட்சியில் வரி செலுத்தியதற்கான வரி ரசீது அசல் **பி.வா.சா.ஆ.6** ஆகும்.

தாவா சொத்திற்கு மின்கட்டணம் செலுத்தியதற்கான மின் கட்டண ரசீது இணையதள நகல் **பி.வா.சா.ஆ.7** ஆகும்., 15.04.2015 தேதியிட்ட தாவா சொத்திற்கான டவுன் சர்வே ரிஜிஸ்டர் உண்மை நகல் **பி.வா.சா.ஆ.8** ஆகும். எனது வாக்குமூலத்தை ஏற்றுக்கொண்டு வாதியின் வழக்கை தள்ளுபடி செய்து தீர்ப்பாக தாழ்மையுடன் பிரார்த்திக்கிறேன்.

**குறுக்கு விசாரணை** -.

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)